RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22231

OPEN ACCESS

# திருமந்திரம் கூறும் வழிபாட்டு முறைகள்

பா. ராதிகா [அ, *], க. புவனேஸ்வரி [அ]

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது) திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Cults Mentioned in the Book Thirumantram

**B. Rathika [a, *], K. Bhuvaneswari [a]**

[a] Department of Tamil, National College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli- 620001, Tamil Nadu, India

* Corresponding Author: rathikabalasubramanian12@gmail.com

Received: 26.09.2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

A variety of devotional literature has emerged in Tamil literature. Among them, the Thirumantram book composed by Thirumoolar is the tenth of the twelve Thirumurai. Thirumoolar is considered as one of the most important of the eighteen Siddhars and he is a pioneer in Siddha literature. Thirumoolar was the first person to expound the Yoga Norm in Tamil. Yoga means to bind together or to bring together. He explained about a simple way of realizing God through the Yoganorm, by uniting and controlling the senses. Thirumantram is an excellent book that has both devotional and physical practice and it also explains various methods that can be followed in life to lead an easy life. In this book the worship of Shiva has been mentioned primarily. But there are many forms of divine worship associated with it that is the realization of God, goddess of the world, there is no power without Shiva, shakti worship, image of goddess Rajeshwari, worship and the benefits we get from worshiping goddess Rajeshwari with devotion, Vairava chakra worship - benefits, Bhuvanapati chakra worship, external worship, internal worship, body worship that highlights the idea that our body is a temple, life is a temple, sound-light worship and so on. This article is an brief explanation about all these worship.

**Keywords:** Worship, Thirumoolar, Siddha literature, Sangam Literature,

## முன்னுரை

ஆதியில் இயற்கையின் இறைவெளி நிலைதான் அறிவும் உணர்வும் என அனைத்துமாக இருந்தது. அனைத்து மனிதர்களும் இயற்கையின் பரிணாமச் சிறப்பின் ஒரு கூறாகவே உள்ளனர். எந்தத் தோற்றத்தில்; தெய்வத்தைத் துதித்தாலும் அது அவன் அறிவின் வெளிப்பாடே ஆகும். எனவே யார் எந்த உருவில், எந்தக் கருத்தில் தெய்வமென்று வழிப்பட்டாலும் அவர் அறிவையே வழிபடுகின்றார். ஒன்றிலிருந்தே பலவும் வெளிப்பட்டுள்ளன. பிரபஞ்சம் முழுமையும் பிரமத்தில் இருந்தே பரிணமித்துள்ளது. யார் கடவுளை வணங்கினாலும் தன்னுடைய எண்ணத்தையும் மனத்தையும் தான் வணங்குகின்றனர் என்கின்றார் வேதாந்தரி மகரிஷி. அதாவது யார் எந்த வகையில் கடவுளை வணங்கினாலும், சிறிது நேரம் பொறுத்து என்ன நிற்கின்றது? என்று பார்த்தால் அவருடைய மனம்தான் அந்த வடிவம் எடுக்கின்றது.

மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளவும் நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றவும் மனோதிடம், மனவலிவு கொள்ளவும் ஏதோ ஒருவழியில் இறைவனை உருவகப்படுத்திக் கொண்டு வணங்குகின்றோம்.

ஆனால் வணங்குவது நம் மனத்தைத்தான். எனவே மனத்தின் சக்தியை உணரும்போது இறைசக்தி ஊடுருவி மனிதனிடத்திலே மனமாக ஆகின்றது. இந்த மனம் அமைதி அடைந்தால் உலக அமைதி என்பது உண்டாகிவிடும்.

## இறையை உணர்தல்

ஆறு சமயங்களின் கோட்பாடுகளில் ஊறித் திளைத்தவர்கள் கூடக் கடவுளைக் கண்டிலர். இந்த ஆறு சமயங்களும் காட்டும் கடவுள் உண்மையான கடவுள் அல்ல. அவன் உருவம் இல்லாதவன், உணரப்பட வேண்டியவன். இத்தெளிவு வந்துவிட்டால் வீடுபேற்றை அடைய முடியும். இந்த ஆறுசமயக் கோட்பாடுகளைத் தெளிவாகக் கற்க வேண்டும். பின் மனத்தில் அசை போட வேண்டும். எழும் வினாக்களுக்கு விடை தேட வேண்டும். ஞானமார்க்கத்தின் துணையுடன் ஆராய வேண்டும். அப்போது இந்தச் சமயங்கள் கூறும் கடவுள் உருவமாக இல்லை என்ற தெளிவு வந்துவிட்டால் அகக்கண்கள் திறந்து கொள்ளும். மனம் விரிவடையும். உள் இருக்கும் இறைவனை அதன் அகப்புறச் செயற்பாடுகளை, விந்தைகளை பிரமாண்டத்தை உணர்ந்து கொள்ளும் திறன் தானே உருவாகும்.

இறைவன் அகத்துள் மட்டும்தான் இருக்கின்றானா? இல்லை புறத்தும் இருக்கின்றானா? என்ற ஐயத்தை,

"உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்கு

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்இறை

உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்கு

உள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே" (Manikkavasagan, 2019)

என்ற பாடல் போக்குகின்றது. இறைவன் உள்ளத்து உள்ளேயும், புறத்தேயும் உள்ளான் என்று நம்புகின்றவர்களுக்கும், உள்ளும் புறமும் இறைவன் இல்லை என்பவர்களுக்கும் உள்ளும் புறமும் இறைவன் இல்லை என்கின்றார் திருமூலர். அதனால் உண்டு, இல்லை என்பதில் அவர் வேறுபாடு காணவில்லை. ஏனென்றால், அன்பே சிவம் என்பதே அவர் உரைக்கும் கடவுள் தன்மையாகும். அன்பு எனும் பண்பும், பண்பட்ட உள்ளமும் இருப்பவர்கள் தம் உள்ளத்து உள்ள இறையை உணர்வார்கள் என்பதை அறிய முடிகிறது (Arunachalam, 2002).

## சக்தி வழிபாடு

சக்தியை உலகமக்கள் பல பேதங்களில் வழிபடுகின்றனர். பராசக்தியின் கூறுகளே கலைமகளாகவும், அலைமகளாகவும், மலைமகளாகவும் விளங்குகின்றன. அவளே பரமேசுவரனோடு இணைந்து ஐந்தொழில் புரிபவளாவாள். சக்தியின் வடிவம் பலவகை என்பதைத் திருவாசகம்,

"ஆறுகோடி மாயாசக்திகள்" என்று குறிப்பிடுகின்றது. கருவூரார் எனும் சித்தர் சக்தி வழிபாட்டுக்கு ஆகமவிதியோடு ஆலயம் எழுப்ப அட்ட சக்திகளை (எண்வகை சக்திகள்) ஏற்படுத்தியமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். சக்தி ஒருத்தியே பல வடிவங்களாக விளங்கக் கூடியவள். அதனால்தான், இதனை,

"தானா அமைந்தவம் முப்புரந் தன்னிடத்

தானான மூவுரு ஓர் உருத் தன்மையள்

தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி

தானான போகமும் முத்தியும் நல்குமே" (Manikkavasagan, 2019)

என்று திருமந்திரம் கூறுகின்றது. கலைமகள், அலைமகள், மலைமகள் என விளங்கும் சக்தியைத் திரிபுரை என்று அழைப்பர். இவளே சுத்த மாயையாகவும், அசுத்த மாயையாகவும் விந்துவாகவும், வைகரி வாக்காகவும், ஓம் என்ற பிரணவமாகவும், உள்ளொளியாகவும், காளியாகவும், பராசக்தியாகவும்

தாமேயான மந்திரமாகவும். சக்தியின் மூர்த்தியாகவும் விளங்குபவள். அவளே அக்கினி, சூரியன், சந்திரனான பேரழகுடன் திகழ்ந்து உலகைக் காப்பவள். கருநிறமுடைய இச்சக்தி நாரயணனுக்குத திதித் தொழிலை நடத்த மாயா உருவை வழங்கியவள். சிவனோடு கருநிறத்தில் பொருந்திய சிவசக்தியாக விளங்கும் இவ்வம்மையை வணங்குபவர் மனத்தில் ஓங்கும் மணிபோன்ற ஒளி விளங்குபவள். ஆதலால் அபிராமிபட்டர் மணியே என்றும் ஒளியே என்றும் கூறுவார். மணிபோன்ற ஒளியதனை பேரொளியாக வணங்குபவர்களுக்கு வீடுபேற்றை அளிப்பவள் என்று திருமந்திரம் தெளிவுபடுத்துகின்றது. வீடுபேறடைவதே திரிபுரையினை வணங்குவதால் கிட்டும் கிடைத்தற்கரிய சிறப்பாகும் (Manikkavasagam, 1982).

## இராஜேஸ்வரியின் உருவம், வழிபாடு, பயன்

"தாளணி நூபுரம் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் கண்டலக் காதிக்கே" (Manikkavasagan, 2019)

என்னும் பாடலில் இராஜேஸ்வரியின் உருவம் சித்தரிக்கப்படுகின்றது. மனத்தில் இவ்வுருவத்தினை நினைந்து வழிபடும் அடியவர்களுக்கு அனைத்தும் வசியப்படும். தனக்கு இன்னல் தரும் மனிதர்களையும் உயிரினங்களையும் ஒருவன் இராஜேஸ்வரியைத் தியானித்து வசியப்படுத்தி விடலாம்.

இராஜேஸ்வரியைத் துதித்துப் பாடி பரவினால் அவள் தன்னை வணங்குபவர்களுக்கு வெளிப்படுவாள். அப்பொழுது அவளை மனித உருவில் உள்ளவர்கள் காணலாம். இறைவி,

"தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறுஇரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்பு
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே" (Manikkavasagan, 2019)

தோத்திரங்கள் பாடித் துதி செய்து, வணங்கி, அவள் திருவடிகளிரண்டையும் வாழ்த்தி வழிபட்டு இருங்கள். இப்படி இருக்கின்ற நிலையில், தியானித்திருக்க, அங்குசம் பாசம், பசுங்கரும்பு, மலரம்பும் கைகளில் ஏந்தியவளாய்க் காட்சி தரும் காமாட்சியைப் பார்த்திடுங்கள் என்று திருமந்திரம் எடுத்துக்காட்டுகின்றது.

## வயிரவச் சக்கரம் வழிபாடு - பயன்

வயிரவர் சிவனது கோரமூர்த்தங்களில் ஒன்றாகும். புகை முதலிய இடையூறுகளைப் போக்க இவரை வழிபடுதல் வழக்கமாகும். இதற்கான சக்கரம் வயிரவச் சக்கரம் எனப்படும். வயிரவர்க்கு உரிய நிறம் செம்மையாகும். அவருக்கு ஆறு கரங்கள் உண்டு.

"ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுஞ் கைக்கொண்டங்கு
ஆமே தமருக பாசமுங் கையது
ஆமே சிரத்தொடு வாளது கையே" (Manikkavasagan, 2019)

ஆருயிர்கள் வணங்க, அவை விரும்பியதைத் தந்தருள, கருணை மனம் கொண்டருளுவதில் முதன்மையான தெய்வம் வயிரவர். இவர் தம் இரு கைகளில் திரிசூலம், மண்டை ஓட்டைக்

கொண்டிருப்பவர். மற்ற கைகளில் தமகருகம், பாசக் கயிறு, வெட்டுண்ட தலையும், கைவாளும் உடையவராய் இருப்பார்.

பதினைந்து திதிகளில் வழிபாட்டிற்குரியனவல்லாத சப்தமி, அட்டமி, தசமி, துவாதசி, சதுர்த்தி ஆகிய நீங்க ஏனைய வளர்பிறை முதல் சட்டிவரை ஆறு ஆதாரங்களில் பொருந்திப் பின் ஒன்பதாம் திதிதாகிய நவமியில் நெற்றிக்கு மேலும், பதினோராந் திதியாகிய ஏகாதசியில் பிடரிப்பக்கமும், பதின்மூன்றாம் திதியாகிய பௌர்ணமியில் இடக்காதின் பக்கமும் ஆக உடலின் பத்து இடங்களில் வயிரவரை அறிந்து நாளும் அவர் உருவத்தை நினைத்துத் தியானம் செய்தல் வேண்டும்.

தியானத்தின் பயனாக வயிரவரைத் தியானிப்பவருடைய பகைவரின் ஆற்றல் குன்றும். பகைவரிடம் கருணை காட்டாது பந்தாடி அழிக்கலாம் என்கின்றது திருமந்திரம். இதனை,

"பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்

பூசனை செய்ய மதுவுட னாடுமால்

பூசனை சாந்து சவாது புழுகுநெய்

பூசனை செய்துநீர் பூசலை வேண்டும்" (Manikkavasagan, 2019)

என்பது திருமந்திரம் வயிரவரை வழிபடுவதற்கு நல்ல தேன், சாந்து, சவ்வாது, புனுகு முதலியவற்றை விரும்பிப் படைத்தலோடு, வயிரவர் நாமத்தை ஓராயிரம் முறை செபித்தல் வேண்டும். இவ்வாறு செபித்தால் பகை நீங்கும், அது மட்டுமல்லாமல் பகைவருக்கும் கலகத்தையும் வயிரவர் வழிபாடு தோற்றுவிக்கும். கல்வி அறிவற்ற காழ்ப்புணர்ச்சியுள்ள மக்களிடையே இவ்வழிபாடு வழக்கத்தில் இருக்கின்றது. புறப்பகையான பகைவரிடம் மட்டுமின்றி அப்பகையான ஐம்புல வேடர்களையும் அழிக்கவல்லதாகும் வைரவர் பூசை என்பதாகும்.

## புவனாபதி சக்கரம்

புவனை என்பது சக்திக்குரிய ஒரு பெயர். சக்திக்குரிய மற்றொரு வழிபாட்டு முறையைப் புவனாபதி சக்கரம் தருகின்றது. புவனாபதிக்குரிய எழுத்துகள் பதினைந்து. அவை பொன்மை, செம்மை, வெண்மை என்ற மூன்று நிறங்களை உடையன. ஒவ்வொரு நிறத்துள்ளும் ஐயைந்து எழுத்துகள் இடம் பெறுகின்றன. இவை முறையே, 1. வாக்பவ கூடம், 2. காமராஜ கூடம், 3. சக்தி கூடம் என்ற மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. புவனாபதிக்குரிய வழிபாடு 1. புறவழிபாடு, 2. அக வழிபாடு என்று இருவகைப்படும்.

## புறவழிபாடு

புவனாபதியின் உருவத்தைத் திருமந்திரம்,

"செய்ய திருமேனி செம்பட்டுடை தானுங்

ஐகயிற் படையங் குசபாசத் தோடபய

மெய்யில் அணிகலன் இரத்தின மாமனி

துய்ய முடியும் அவயத்தில் தோற்றமே" (Manikkavasagan, 2019)

என்று கூறுகின்றது. சிவந்த திருமேனியை உடைய புவனாபதிக்குச் சிவந்த பட்டாடை உரியது. கைகளில் அங்குசம், பாசம் ஆகியவற்றோடு அபய முத்திரையும் விளங்கும். திருமேனியில் அணிந்துள்ள பல்வேறு அணிகலன்களோடு இரத்தினம் பதித்தவையும் கீரிடமும் காணப்படும். புவனாபதிக்குரிய படையில் ஹரீம் என்று சொல்லி மந்திரிக்கப்பட்ட பால், அன்னம் ஆகியவையாகும். இவற்றைப் படையலிட்டுப் பின் நாரதாய சுவாகா என்று சொல்லி வணங்கி, புவனாபதி தன்னுள் கலந்திருப்பவள்

என்று நினைத்து, அன்னத்தை உண்ண வேண்டும். அப்படிச் செய்பவர்கள் விரும்பும் அனைத்தையும் அவள் தருவாள் என திருமந்திரம் கூறுகின்றது.

## அகவழிபாடு

திருமூலர் நன்கு ஆராய்ந்து புவனாபதியைத் தவிரச் சிறந்த தெய்வம் வேறில்லை என்று முடிவு கூறுகின்றார். இதனை,

"ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்

தேரில் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்

வாரித் திரிகோண மனமின்ப முத்தியுந்

தேரில் அறியுஞ் சிவகாயந் தானே" (Manikkavasagan, 2019)

என்னும் பாடல் தெளிவுறுத்துகின்றது. கடலைப்போன்று பரந்து விரிந்துள்ள முக்கோண அமைப்பில் மனம் நித்தியானந்தத்தையும் அகண்டத்தையும் தியானித்தால் அது சிவனை வழிபட்டதற்கு ஒப்பாகும். பராசக்தி ஒருத்தியாக இருந்தாலும் அவனே இறைவனுக்கு அங்கமாகவும் விளங்குகின்றாள். இவளை மனத்தினால் வழிபட்டால் முத்தி கிட்டும். அவள் சிவகுருவோடு பொருந்தி நிற்;பதில் எட்டுச் சக்தியாக விளங்குவாள். அட்டசக்திகளும் எண்சாண் உடம்பில் என்பது தத்துவம். புவனாபதியை வழிபடுவதால் இம்மை வாழ்வுக்குத் தேவையான எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். அத்துடன், இம்மை வாழ்வுக்குரிய வீடுபேறும் கிட்டும் என்பது திருமந்திரத்தால் தெளிவாகின்றது.

## உடல் வழிபாடு

உடல் வழிபாடு என்னும் தொடருக்கு உடலை வணங்குதல் என்பது ஒரு பொருள். வழி - நெறி, படுதல் - ஒருநெறியில் செல்லுதல் இத்தொடருக்கு உடலை ஒரு நெறியில் செலுத்துதல் என்றும் பொருள். உடல் வழிபாடு என்பது அகவழிபாடாகும். இதன் இன்றியமையாமையைத் திருமந்திரம் வலியுறுத்திக் கூறியுள்ளது.

நோய்நொடிகளுக்கு இடமளித்து அழியக்கூடிய இந்தப் பருவுடலின் கூட்டமைப்புப் பாதுகாவலோடு அமைந்தது. ஐந்து இந்திரியங்கள், ஆறு ஆதாரங்கள், முப்பது எலும்பிணைப்புகள், பதினெட்டுப் பொருத்துள், ஒன்பது பந்தல்கள், பதினைந்து எலும்பு வரிசைகள் ஆகியனவெல்லாம் சேர்ந்தே உடம்பு என்கின்றார் திருமூலர் (Kausalya, 1998).

உடல் அழிந்தால் உயிராகிய ஆன்மா உடலில் வாழ்வதற்கும் பக்குவம் பெறுவதற்கும் வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் திருமூலர் உடம்பை வளர்த்து இறவாவரம் பெறுவதற்கான உணர்வைத் திருமந்திரம் வாயிலாக உலகிற்கும் உணர்த்துகின்றார்.

தூல உடல் புறஅளவில் எண்சாண் ஆக அமைந்தது. எண்சாண் அளவான உடலில் உள்ள ஆறு ஆதாரங்களையும் அவற்றின் தொடர்பையும்,

"நாதலிழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு

தானிதழ் ஆனவை நாற்பது நாலுள

பாலிதழ் ஆனவன் பங்கய மூலமாய்த்

தானிதழ் ஆகித் தரித்திருந் தானே" (Manikkavasagan, 2019)

என்னும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது. நான்கு இதழ்களுடைய மூலாதாரம். ஆறு இதழ்கள் கொண்ட கொப்பூழ். தொண்ணூறு இதழ் கொண்ட மேல் வயிறு. நாற்பது இதழுடைய நெஞ்சம். பதினான்கு இதழுடைய கழுத்து. ஆண், பெண் ஆகிய இருபாலும் ஆகி ஆஞ்ஞா சக்கரத்தில் விளங்கும் சக்தி, பிற ஆதாரங்களில் இருந்தருளுவாள் என்பது பொருளாகும்.

இறைவன் வீட்டுச்சுவர் மாடங்களில், மண்டபங்களின் பூசையறைகளில், ஆலயங்களில், வேடம் பூண்டவரிடத்தில் உள்ளான் என்று எண்ணி உணர்ந்து வழிபட்டால் காட்சி தருவான். இறைவன் பொய்கலந்த உள்ளத்தில் தங்க மாட்டான். திருமந்திரம் இவற்றை,

"கை கலந்தானைக் கருத்தினுள் நந்தியை

மெய் கலந்தான்தன்னை வேத முதல்வனைப்

பொய் கலந்தார் முன் புகுதாப் புனிதனைப்

பொய் ஒழிந்தார்க்கே புகலிடம் ஆமே" (Manikkavasagan, 2019)

சிவசிந்தனையில் பொருந்தி வாழ்பவர் நினைவோடு கலந்திருப்பவனே அவர் எண்ணத்துள் நீங்காதிருக்கின்ற நந்திப் பெருமானை, அன்பர் உடலோடும் ஊனுயிரோடும் ஒன்றிக் கலந்திருக்கின்ற, வேதங்களின் மூலமான பரம்பொருளை, பொய்யுடையார் மனத்துள் புகுதாத புனிதமானவனை, பொய் உலக வாழ்வின் இச்சைகளை விட்டவர்க்கே அடைக்கலப் பொருளாக இருப்பவனை, எண்ணிப் பணிக. அவன் அருளே அனைவர்க்கும் ஆன புகலிடம் என்று குறிக்கின்றது.

குண்டலினி யோகம் செய்பவர் குருவருளால் அவருணர்த்திய முறையில் உடலை ஆராதனை செய்தால் சிறப்புகள் பெறுவர். உடலில் ஒலி தோன்றும். ஒளி பிறக்கும், அது மட்டுமல்லாமல் சகஸ்ரதளத்தை அமுதமுண்டு இறவாவரம் பெறுவர்.

## கோவில் வழிபாடு

"அன்றுநின்றான் கிடந்தான் அவன் என்று

சென்றுநின்று எண்திசை ஏத்துவர் தேவர்கள்

என்றுநின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை

ஒன்றிஎன் உள்ளத்து உள் இருந்தானே" (Manikkavasagan, 2019)

அன்றைக்கு அங்கே நின்றான், இங்கே கிடந்தான் அச்சிவ பரம்பொருள் என்று, எட்டுத் திக்குகளிலும் சென்று நின்று பரமனை வழிபடுவர் வானுலகத் தேவர்கள் ஆவர். ஆனால் நானோ என்றும் என் உள்ளத்துள்ளே வைத்து எம் பெருமானை வழிபட்டு வணங்குவேன் அவனும் என் உள்ளத்துடன் கலந்து என்னுள்ளே இருந்தான்.

உள்ளத்தில் உயிராகச் சுடர் விடுபவன் இறைவன். உள்ளமே சிவன் வாழும் கோயில். உள் உள்ள இறைவனைத் தரிசிக்க முடியாதவர், எங்கெங்கோ தேடி அலைகின்றனர் என்று திருமூலர் வருந்துவதை இப்பாடல் கூறுகின்றது.

திருமூலர் உடம்பின் உள்ளே உள்ள இறைவனை வணங்கவே வழி கூறுகின்றார். ஊன் உடம்பே ஆலயமாக சித்திரிக்கின்றார். முகத்தின் கண் கொண்டு பார்க்காமல், அகத்தின்கண் கொண்டு பார்த்தால் இந்த உண்மைகளை எல்லாம் அறிந்து கொள்ள முடியும் என்கின்றார்.

இறைவழிபாடு என்பதில் அன்பே சிவம் என்கின்றார். மேலும் அன்பே ஆதாரமாகக் கொண்டவர்களால் மட்டுமே இன்பநிலையை அடைய முடியும் என்கின்றார். இதனை,

"என்பே விறகாக இறைச்சி அறுத்திட்டுப்

பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்

அன்போடு உருகி அகங்குழை வார்க்கின்றி

என்போல் மணியினை எய்தவெண் ணாதே" (Manikkavasagan, 2019)

தன் உடல் எலும்புகளையே விறகாகக் கொண்டு, உடல் தசைகளை எல்லாம் அறுத்துப் போட்டு, பொன்னிறம் தோன்ற நெருப்பில் நன்றாக வறுத்து வதக்கினாலும் அன்போடு மனம் உருகி, உள்ளம்

குழையத் தொழுது வணங்குபவர்களுக்கே அல்லாது, மற்றவர்க்கு என்னைப் போல இறையருள் பெற இயலாது. என்பதை எடுத்துரைக்கின்றார் திருமூலர்.

மக்களின் துன்பத்தை நீக்க முயலுவதை இறைவனைத் தொடுவதற்குச் சமமாகும். செலுத்தும் அன்பினில் வேறுபாடு இருக்கக் கூடாது. எல்லாம் சிவமயம் என உணர வேண்டும். இதனை,

"மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்

மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்

மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்

மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தை" (Manikkavasagan, 2019)

உயிர் இருக்குமிடம் சிவலிங்கமே என்று கூறும் இப்பாடல், மனித உடலை, சிதம்பரமாகவும் சதாசிவமாகவும் குறிப்பிடுகின்றது.

ஒவ்வொருவருக்கும் அவரவர் உடலே சிவலிங்கமாகும். சிவன் உள்ளத்தில் இருப்பதால் உடல் சிவலிங்கம் ஆகின்றது. உலகப் பொருள்களில் உள்ள உயிர் அகரமாகும், உயிர் சிவனாக இருப்பதால் அவனே அகரமாகத் திகழ்கின்றான். எந்தப் பொருளிலும் உள்ள ஆற்றல் சக்தியைக் குறிப்பது உகரமாகும். அகரமும் உகரமும் கலந்தது உலகம். ஆகவே, அகரம்-உயிர்: உகரம்-உடல் உடலும் உயிரும் கலந்தது என்பதை,

"அகர உகர வடிவமே சிவலிங்கம்" என்ற அடிகளால் இதை அறியலாம் (Manikkavasagan, 2019).

## ஒலி - ஒளி வழிபாடு

உண்மைப் பொருளைத் தம் உடலில் உணர்ந்து உள்ளன்போடு வழிபடுபவர்களுக்கு இறைவன் வெளிப்படுவான், இதனை

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளற் பிரானர்க்கு வாய்கோபுர வாசல்

தெளளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே" (Manikkavasagan, 2019)

என்று திருமந்திரம் எடுத்துரைக்கின்றது. உடம்பு- ஆலயம், உள்ளம்- கருவறை: வள்ளல்- சிவன்: வாய்-கோபுரவாசல், புலனைந்து- ஞானேந்திரியங்கள் ஐந்து காளாமணிவிளக்கு- சீவன் சிவத்துடன் பொருந்தியபோது தோன்றும் பெருஞ்சோதி. உள்ளம்- சூக்குமம் என்றும், உடம்பு- தூலம் என்றும் அறிதல் வேண்டும். இறைவன் உடலை ஆலயமாகக் கொள்கின்றான் புறவுலகில் வழிபாட்டின் போது ஒலியின் வடிவாக மணியை அடித்தலும், ஒளியின் வடிவாகத் தீபம் ஏற்றலும் நிகழ்கின்றன. அவ்வாறே புலனொற்றி இறைவனை வணங்கும்போது, உடலில் இடியும் முழக்கமும் ஈசர் உருவம் என்பதற்கேற்ப ஒளியும் ஒலியும் தோன்றுகின்றன. இடி -ஒளி, முழக்கம் - ஒலி, இவ்வாறு ஒலியும் ஒளியுமாக விந்து நாதமாக உள்ள ஈசனை உடலிற் கண்டு மகிழ்வதும், ஒலியை உணர்வதும், ஒளியை அறிவதும் உடல் வழிபாட்டின் பாற்படுவனவாகும். திருமந்திரம் உடலில் இறைவனைச் சிவசக்தியாய்க் காண்கின்றது. விந்து சக்தி, நாதம் சிவம். விந்தின் வடிவம் வட்டம், நாதத்தின் வடிவம், தண்டம், நாதமும் விந்தும் கலந்து உருப்பெறுவதை ஆன்மலிங்கம் என்று ஆன்மாவே இலிங்கமாதலைத் திருமந்திரம் விளக்குகின்றது.

## முடிவுரை

திருமந்திரம் ஒரு வாழ்வியல் நூலாக திகழ்கின்றது. இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் பிறவி நீக்கத்திற்குத் வீடுபேற்றிற்கும் வழிகாட்டுவதே திருமந்திரத்தின் உயரிய நோக்கமாகும். அறத்துடன் அன்பையும், இறைவழிபாட்டின் மேன்மையையும் வற்புறுத்தி

எடுத்துரைக்கின்றது. உடல் நிலையற்றதாயினும் யோகநெறி வாழ்ந்து, அவ்வுடலைக் கோயிலாக்கி இறை அனுபவம் உணர்ந்து வாழச் சிறந்த வழியினைச் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டி நம்மை வாழ வைக்கிறது திருமந்திரம். அப்படிப்பட்ட திருமூலர் வழங்கிய திருமந்திரத்தை நாமும் உணர்ந்து, வழிபட்டு மகிழலாம்.

## References


Arunachalam, P. (2002) Thirumanthira Kotpadu, Mullai Nialayam, Chennai, India

Kausalya, G. (1998) Thirumanthirathil Valviyal Sinthanaikal, Vijayan Pathippagam, Velum, India

Manikkavasagam, R. (1982) Thirumanthira Araichi, Annai Abirami Arul, Chennai, India

Manikkavasagan, G. (2019) Thirumoolar Thirumanyhiram Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License